நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், உளுந்தூர்பேட்டை.
முன்னிலை: திருமதி.வே.கோமதி, B.A., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1, உளுந்தூர்பேட்டை
2026–ம் ஆண்டு ஜூன் மாதம் 01 ம் நாள் திங்கள்கிழமை

**சி.எம்.பி. எண்.666/2026**

1. திரு.அந்தோணி ரைமண்ட் (வயது 32/2026)
த/பெ. அருளப்பன்

.. மனுதாரர் /எதிரி.

// எதிர் //

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
எலவனாசூர்கோட்டை காவல் நிலையம்.
குற்ற எண். 120/2026

U/sec. 7(1)(a) CLA ACT, 296(b) BNS

..எதிர்மனுதாரர்/குற்றமுறையிடுபவர்.

இம்மனுவானது 22.05.2026 தேதியன்று இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு, மனுதாரர்/எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. K. ரஞ்சித்., BA.,BL.,, அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை வழக்குரைஞர் உளுந்தூர்பேட்டை அவர்கள் முன்னிலையாகியும் எடுத்துரைத்த வாதுரைகளுக்கு கேட்பு நல்கியும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவு பின்வருமாறு.

**உத்தரவு**

1. மனுதாரர் /எதிரி தரப்பில் எதிரியை பிணையில் விட கோரி பிரிவு 480 BNSS-ன்கீழ் முதலாவது பிணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எலவனாசூர்கோட்டை காவல் நிலைய குற்ற எண் 120/2026 ல் கண்டுள்ள எதிரி மீது 7(1)(a) CLA ACT, 296(b) BNS ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்டு 20.05.2026–ம் தேதி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

3. மனுதாரர் தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர், எதிரி கடந்த 20.05.2026ம் தேதி கைது செய்யப்பட்டு நீதிமன்றக்காவலில் இருந்து வருவதாகவும், மனுதாரர்/எதிரி அப்பாவி என்றும், தலைமறைவாகமாட்டார் என்றும், சாட்சிகளை கலைக்க மாட்டார் என்றும், வழக்கு விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளிப்பார் என்றும், இந்நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனையை ஏற்று நடப்பார் என்றும் பிணையதார்கள் வழங்க தயாராக இருக்கிறார். எனவே, எதிரியை பிணையில் விட வேண்டும் என்று எடுத்து உரைக்கப்பட்டது.

4. அரசு தரப்பிற்கு, அறிவிப்பு கொடுக்கப்பட்டு, மனுதாரர்/எதிரிக்கு எலவனாசூர்கோட்டை காவல்நிலையத்தில் குற்ற எண்கள்.171/2024, 110/2022, 108/2022, 1654/2020, 91/2020, 1164/2020, 134/2024 ஆகிய வழக்குகள் உள்ளன. மனுதாரர்/எதிரியை பிணையில் விட்டால் இது போன்ற குற்றச்செயலில் தொடர்ந்து ஈடுபடுவார். எனவே, எதிரியை பிணையில் விட கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

5. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.கடந்த 20.05.2026–ந் தேதி உளுந்தூர்பேட்டை வட்டம், எறையூர் கிராமம், கல்லறை மேற்கு தெருவை சேர்ந்த எதிரி அந்தோணிரைமண்ட் த/பெ அருளப்பன் என்பவர் கையில் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் வகையில் சுமார் 1 –1/2 அடி பட்டாகத்தியை கையில் வைத்துகொண்டு, அசிங்கமாக பேசியும், சட்ட ஒழுங்கு பிரச்சனையை ஏற்படுத்தும் வகையில் பேசிய காரணத்திற்காக எதிரி கைது செய்யப்பட்டுள்ளார். மனுதாரர்/எதிரி மீது எலவனாசூர்கோட்டை காவல்நிலையத்தில் குற்ற எண்கள்.171/2024, 110/2022, 108/2022, 1654/2020, 91/2020, 1164/2020, 134/2024 ஆகிய வழக்குகள் உள்ளன. மனுதாரர்/எதிரியை பிணையில் விட்டால் இது போன்ற குற்றச்செயலில் தொடர்ந்து ஈடுபடுவார் என்று எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த ஆட்சேபணை ஏற்றும், வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும் மனுதாரர்/எதிரியை பிணையில் விடுவதற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்பதால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள பிணை மனுவை அனுமதிப்பது இயற்கையின் நீதியின் நலனுக்கு உகந்தது அல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து மனுதாரரின் பிணை மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு இன்று 01.06.2026 நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

V GOMATHI

Digitally signed by V GOMATHI
Date: 2026.06.01 02:50:24 +0600

நீதித்துறை நடுவர் எண்.1,
உளுந்தூர்பேட்டை.